“வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா”–வில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் (11.12.2024) கேரள மாநிலத்திற்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு வரவேற்றார்.

‘வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார்’ நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்வதற்காக கேரள மாநிலத்திற்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று முன்தினம் (11.12.2024) கொச்சின் விமான நிலையத்தில், எர்ணாகுளம் மாவட்ட ஆட்சித் தலைவர் என்.எஸ்.கே. உமேஷ், புத்தகம் வழங்கி வரவேற்றார்.

கேரளம் வந்துள்ளது

சொந்த மண்ணில் இருப்பது போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, டிச. 13-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேரள மாநிலத்திற்கு சென்றுள்ளார். அதுகுறித்து தனது சமூக வலைதளத்தில், ‘கேரளம் வந்துள்ளது சொந்த மண்ணில் இருப்பது போன்று உணர்வை ஏற்படுத்துகிறது’ என்று குறிப்பிட்டுள்ளார்.

நேற்று (12.12.2024) நடைபெற உள்ள வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்துகொள்ள கேரள மாநிலத்திற்கு சென்றது குறித்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்துகொள்வதற்காக வளமான பண்பாடும், அமைதி தவழும் இயற்கை அழகும், முற்போக்குணர்வும் கொண்ட கேரளம் வந்துள்ளேன்.

ஒவ்வொரு முறை நான் இங்கு வரும்போதும் நம் திராவிட உடன்பிறப்புகள் நல்கும் வரவேற்பும் கனிவுமிகு விருந்தோம்பலும் நெஞ்சைத் தொடுகிறது. சொந்த மண்ணில் இருப்பதுபோன்ற உணர்வை ஏற்படுத்துகிறது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

திரையுலகில் தொடர் வெற்றிகளைக் குவித்து வரும்

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்திற்கு பிறந்த நாள் நல்வாழ்த்துகள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, டிச. 13-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 'சூப்பர்ஸ்டார்' ரஜினிகாந்த் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

முதல்வர் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

எல்லைகள் கடந்து 'ஆறிலிருந்து அறுபதுவரை' அனைவரையும் தன்னுடைய நடிப்பால், ஸ்டைலால் ரசிகர்களாக்கிக்

கொண்ட அருமை நண்பர் 'சூப்பர்ஸ்டார்' ரஜினிகாந்த் அவர்களுக்கு என் பிறந்தநாள் நல்வாழ்த்துகள்!

திரையுலகில் தொடர் வெற்றிகளைக் குவித்து வரும் தாங்கள், எப்போதும் அமைதியோடும் மன மகிழ்ச்சியோடும் திகழ்ந்து மக்களை மகிழ்வித்திட வேண்டுமென விழைகிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட

தமிழ்நாட்டு மீனவர்களை விடுவிக்க - தூதரக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது!

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு – ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் கடிதம்!

புதுடெல்லி, டிச. 13 -

பாகிஸ்தான் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்களை விடுவிக்க தூதரக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் கடிதம் எழுதியுள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

தமிழ்நாட்டைச் சேர்ந்த 7 மீனவர்களுடன் சேர்த்து 14 இந்திய மீனவர்கள் குஜராத்தின் போர்பந்தரில் இருந்து மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், 3.1.2024 அன்று பாகிஸ்தான் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடி இயந்திரப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒன்றிய அரசை வலியுறுத்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 20.11.2024 அன்று எழுதியிருந்த கடிதத்தைச் சுட்டிக்காட்டி, “பாகிஸ்தான் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களை விடுவிக்க உரிய நடவடிக்கைகள் இந்திய அரசால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக” ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் கடந்த 6.12.2024 அன்று பதில் கடிதம் அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில், பாகிஸ்தான் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 14 மீனவர்களையும், அவர்களது 'ஸ்ரீ வ்ராஜ் பூமி' (பதிவு எண்.INDGJ25MM3458) மற்றும் 'மந்தீப்' (பதிவு எண்.INDGJ25MM1582) பெயர் கொண்ட படகுகளையும் பாகிஸ்தான் அதிகாரிகள் 3.1.2024 அன்று சிறைபிடித்ததை அறிந்த இந்திய அரசு, கைது செய்யப்பட்ட மீனவர்களையும், மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க ஏதுவாக, பாகிஸ்தான் அரசின் கவனத்திற்கு இதனைக் கொண்டு சென்றுள்ளதாகவும், மீனவர்களுக்கு தூதரக அனுமதி கோரப்பட்டுள்ள நிலையில், பாகிஸ்தான் அதிகாரிகளால் இதுவரை அது வழங்கப்படவில்லை என்றும் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமாபாத்தில் உள்ள இந்தியத் தூதரகம், சிறைபிடிக்கப்பட்டுள்ள 14 மீனவர்களுக்கும் விரைவில் தூதரக அனுமதி கிடைப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து செய்து வருவதாகவும், மீனவர்கள் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்படும் வரை அவர்களது பாதுகாப்பு மற்றும் உடல்நலனை உறுதி செய்யுமாறு பாகிஸ்தானிடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்கள், இந்திய தூதரகம் இதைத் தொடர்ந்து கண்காணித்து, மீனவர்களை முன்கூட்டியே விடுவிப்பதற்கும், தாயகம் திரும்புவதற்கும் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என முதலமைச்சர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக் கழகங்களின்

ஆட்சி மன்றப் பேரவை உறுப்பினர்களாக - சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்வு!

பேரவைத் தலைவர் மு.அப்பாவு அறிவிப்பு!

சென்னை, டிச. 13 -

சட்டப் பேரவையில், டிச.10 - செவ்வாய்க்கிழமை அன்று, பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள், தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களின் ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்களாக, சட்டப் பேரவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள விவரத்தை அறிவித்தார்.

பேரவைத் தலைவர் அவர்கள், இதுகுறித்து வெளியிட்ட அறிவிப்பு வருமாறு:-

பல்கலைக்கழகங்களின் ஆட்சி மன்றப் பேரவை, ஆட்சிக் குழு, மேலாண்மைக் குழுமம் மற்றும் கல்விக் குழு ஆகியவற்றில் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாகப் பணிபுரிய உறுப்பினர்களிடமிருந்து முறையாக வேட்புத்தாள்கள் வரப்பெற்றன.

அழகப்பா பல்கலைக்கழகம் ஆட்சி மன்றப் பேரவை டாக்டர் வை. முத்துராஜா,

பாரதியார் பல்கலைக்கழகம் ஆட்சி மன்றப் பேரவை ஈ.ஆர். ஈஸ்வரன், ஆர். கணேஷ்,

பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆட்சி மன்றப் பேரவை ரா. இளங்கோ, ப. அப்துல் சமது,

மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகம் ஆட்சி மன்றப் பேரவை ஆ. வெங்கடேசன், மு. பூமிநாதன், செ. ஊர்வசி அமிர்தராஜ், வி.வி. ராஜன் செல்லப்பா,

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆட்சி மன்றப் பேரவை டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், ரூபி ஆர். மனோகரன்,

பெரியார் பல்கலைக்கழகம் ஆட்சி மன்றப் பேரவை பெ. ராமலிங்கம், ட்டி. இராமச்சந்திரன்,

தமிழ்நாடு டாக்டர் எம். ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் ஆட்சி மன்றப் பேரவை டாக்டர் நா. எழிலன், வி.ஜி. இராஜேந்திரன், தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆட்சி மன்றப் பேரவை டி.கே.ஜி. நீலமேகம், ம. பிரபாகரன்,

சென்னைப் பல்கலைக்கழகம் ஆட்சி மன்றப் பேரவை அ. வெற்றிஅழகன், ஜோசப் சாமுவேல், க. கணபதி, ஐட்ரீம் இரா. மூர்த்தி, கோ. செந்தில் குமார், திருமதி கு. மரகதம் குமரவேல்,

அண்ணா பல்கலைக்கழகம் ஆட்சிக் குழு இ. பரந்தாமன், அண்ணா பல்க லைக் கழகம் ஆட்சிக் குழு ம. சிந்தனைச் செல்வன்,

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியல் பல்கலைக்கழக ஆட்சிக் குழு சி.வி.எம்.பி. எழிலரசன்,

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மேலாண்மைக் குழுமம் தி. வேல்முருகன்,

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக மேலாண்மைக் குழுமம் வி.பி. நாகைமாலி,

தமிழ்நாடு கால்நடை மருத்துவம் அறிவியல் பல்கலைக்கழக மேலாண்மைக் குழுமம் டாக்டர் இரா. இலட்சுமணன்,

திருவள்ளூர் பல்கலைக்கழகம் கல்விக் குழு ஏ.பி. நந்தகுமார், ஏ.நல்லதம்பி தேர்ந்தெடுக்கப் பெறவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள வேட்புத் தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால் வேட்புத்தாள்கள் அளித்த உறுப்பினர்கள் அனைவரும் அந்தப் பதவிகளுக்கு முறையாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

மேற்குறிப்பிட்டுள்ள பல்கலைக்கழகங்களின் அமைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக்காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுக்காலங்களாக இருப்பினும், அவர்கள் 16-வது ஆட்சி மன்றப் பேரவை சட்டமன்றப் பேரவை காலம் முடியும்வரை அப்பதவிகளில் ப்பணியாற்றுவர். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் ஏதாவது ஒரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவி இழக்க நேரிட்டால் அந்நாளோடு பல்கலைக்கழகத்தின் அமைப்பில் அவர் வகித்துவரும் உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் அறிவித்தார்.

புதுக்கோட்டை மாவட்ட மக்களின் நலனுக்காக

சட்டக் கல்லூரி அமைக்கப்படுமா?

பேரவையில் டாக்டர் வை.முத்துராஜா கேள்வி!

சென்னை, டிச. 13 -

புதுக்கோட்டையில் சட்டக் கல்லூரி அமைக்கப்படுமா? என்று பேரவையில் கேள்வி நேரத்தின்போது உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா கேள்வி எழுப்பினார்.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற விவாதம் வருமாறு:

டாக்டர் வை. முத்துராஜா: , புதுக்கோட்டை மாவட்டத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது ஆட்சிக் காலத்தில், தனி மாவட்டமாக அறிவித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் புது க்கோட்டையில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயல்பட்டுவருவதைப் போன்று, முன்னாள் முதல்வர் கலைஞருக்கு மேலும் புகழை சேர்க்கும்வகையில், புதுக்கோட்டை மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான சட்டக் கல்லூரி அமைக்க முதலமைச்சர் அவர்களின் அனுமதி பெற்று, நடப்பு நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்து, சட்டக் கல்லூரி அமைத்துத் தருவதற்கு எனது மாவட்ட சட்டத் துறை அமைச்சர் அவர்கள் முன்வரு வார்களா என்று பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் எஸ். ரகுபதி: புதுக்கோட்டை மாவட்டத்திற்கு அருகிலேயே, காரைக்குடி, திருச்சி ஆகிய இரண்டு இடங்களிலும் சட்டக் கல்லூரிகள் இருக்கின்றன. அக்கல்லூரிகளில் போதுமான இடங்கள் இருக்கின்றன. இப்போது ‘மாவட்டத்திற்கொரு நீதி மன்றம்’ என்ற கொள்கை இருந்தாலும்கூட, ஒரு நீதி மன்றம் அமைப்பதற்கு குறைந்தபட்சம் 105 கோடி ரூபாய் செலவாகின்ற சூழ்நிலை உள்ளது.

அவ்வளவு பெரிய தொகை செலவு செய்து சட்டக் கல்லூரி கட்டுவது, அரசின் பரிசீலனையில் இருக்கிறதே தவிர, நிச்சயமாக முதலமைச்சர் அவர்களுக்கும் ஒரு மாவட்டத்திற்கு ஒரு சட்டக் கல்லூரி உருவாக்கித் தர வேண்டுமென்ற எண்ணம் இருக்கின்றது. ஆனால், அதற்கு போதிய நிதி ஆதாரம் இல்லை என்பதை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

தென்காசி தெற்கு மாவட்ட தொழிலாளர் அணி சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட அமைப்பாளர் முருகையா ஏற்பாட்டில் கடையம் தெற்கு ஒன்றியம் சிவசைலத்தில் உள்ள அவ்வை ஆசிரமத்தில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு மதிய உணவு வழங்கும் நிகழ்வு ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன் பங்கேற்று உணவு வழங்கினார். நிகழ்வில் கழக நிர்வாகிகள் பக்கீர் மைதீன் சுடலை, முத்து, வின்சென்ட், முல்லையப்பன், அய்யலுச்சாமி, தமிழ்ச்செல்வன், சுந்தரி, மாரியப்பன், ஜகாங்கீர், பெருமாள் சீனித்துரை, ஜெகதீசன், ரவிச்சந்திரன் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

நெல்லை மாவட்டம் – அம்பாசமுத்திரத்தில் – மாஞ்சோலை எஸ்டேட்

தொழிலாளர்களுடன் அமைச்சர் கே.என்.நேரு கலந்துரையாடி குறைகள் கேட்டறிந்தார்!

இரா.ஆவுடையப்பன் – மு.அப்துல் வகாப் பங்கேற்பு!

நெல்லை, டிச. 13 -

நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் வட்டத்திற்கு உட்பட்ட மாஞ்சோலை எஸ்டேட் பகுதியில் வாழும் மாஞ்சோலை தொழிலாளர்களுடன் அங்குள்ள தொடக்கப் பள்ளியில் வைத்து நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேரில் சந்தித்து கலந்துரையாடி குறைகளை கேட்டறிந்தார்.

நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் அருகே மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள மாஞ்சோலை, காக்காச்சி நாலுமுக்கு, ஊத்து, குதிரைவெட்டி ஆகிய பகுதிகளில் தேயிலை எஸ்டேட் செயல்பட்டு வந்தது. 99 வருட குத்தகை அடிப்படையில் இந்த எஸ்டேட் தனியார் நிறுவனமான பாம்பே பர்மா டிரேடிங் கார்ப்பரேஷன் என்ற நிறுவனத்தினால் நிர்வாகித்து நடைபெற்றது.

குத்தகை காலம் 2028 ஆம் ஆண்டு முடியும் தருவாயில் தற்போது பி.பி.டி.சி. நிறுவனமானது தேயிலை உற்பத்தி தொழில் நிறுத்திவிட்டு அதனை காலி செய்யும் பணிகளை தொடங்கியுள்ளது. இதன் ஒரு பகுதியாக குத்தகை காலம் முடிய நான்கு ஆண்டுகள் இருந்த போதிலும் அங்குள்ள தேயிலைத் தோட்ட தொழிலாளர்களுக்கு விருப்ப ஓய்வு திட்டத்தை அறிவித்தது. இதன் மூலம் 534 தொழிலாளர்கள் விருப்பு ஓய்வு திட்டத்தில் கையெழுத்திட்டு முதல் கட்டமாக கருணைத் தொகையில் 25 சதவீதம் பெற்று விட்டனர். சிலர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது இதனை அடுத்து மக்களின் வாழ்வாதாரம் மற்றும் அவர்களின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளுக்காக எஸ்டேட் பகுதி மக்களுடன் இன்று மாஞ்சோலையில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு மக்களை நேரில் சந்தித்து கலந்துரையாடினார் .

அப்போது பேசிய அந்த மக்கள் தங்களுக்கு இந்த பகுதியிலேயே இருக்க அனுமதி வழங்க வேண்டும் அப்படி முடியாத பட்சத்தில் அரசு 25 லட்சம் ரூபாயும், தேயிலை நிறுவனம் 10 லட்சம் ரூபாயும் இழப்பீடாக வழங்க வேண்டும், மாஞ்சோலை எஸ்டேட் மக்கள் ஒரே இடத்தில் சமத்துவபுரம் போல் வசிக்க வீடுகள் கட்டித்தர கோரிக்கை விடுத்து பேசினர். இதனை கேட்டறிந்த அமைச்சர் கே.என்.நேரு அவர்களிடம் உங்கள் கோரிக்கைகள் முதல மைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கு உட்பட்டு நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

நெல்லை மாவட்டம் மாஞ்சோலை எஸ்டேட் பகுதியில் வாழும் மக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதிகள் நீதிமன்ற உத்தரவுக்கு உட்பட்டு செய்து கொடுக்கப்படும். இந்த மக்களின் வாழ்வாதரங்களை மேம்படுத்துவதற்காக முதலமைச்சர் அவர்களை சந்திக்கவும் ஏற்பாடு செய்யப்படும். தமிழக அரசு மாஞ்சோலை எஸ்டேட் பகுதி மக்களுக்கான 11 வகையான சிறப்பு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மாஞ்சோலை எஸ்டேட் பகுதி மக்கள் விரும்பும் இடங்களில் கலைஞர் அவர்கள் வீடுகட்டும் திட்டத்தில் முழு மானியத்துடன் வீடு கட்டிக் கொடுக்கப்படும்.

இங்கு வசித்த 4 தொழிலாளர்களுக்கு அவர்கள் விருப்ப படி வீடு வழங்கப்பட்டுள்ளது. இருந்த போதும்

மாஞ்சோலை எஸ்டேட் பகுதியில் வாழும் மக்கள் சமத்துவமாக வாழ்வதற்கு சமத்துவபுரம் போல் ஒரே இடத்தில் வசிக்கவும் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

அதுபோன்று வேண்டும் என்று அனைவரும் விரும்பினால் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். கலைஞர் அவர்களின் உரிமைத் தொகை இங்கு பலருக்கு கிடைத்துள்ளது. இன்னும் கிடைக்காதவர்களும் உள்ளனர். அவர்களுக்கு உரிமைத்தொகை கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

பி.பி.டி.சி தேயிலை நிறுவத்தில் இருந்து தொழிலாளர்களுக்கு வரவேண்டிய நிலுவைத் தொகை குறித்து முறையாக மனு அளித்தால், மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், மாவட்ட ஆட்சியர் மரு.கா.ப.கார்த்திகேயன், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப், களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகதுணை இயக்குனர் இளையராஜா, உள்ளிட்ட அனைத்து துறை அதிகாரிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.